# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# Provincial Department of Education – Northern Province


## இரண்டாம் தவணைப் பரீட்சை 2023

| | | |
|---|---|---|
| தரம் :- 10 | நாடகமும் அரங்கியலும் I&11 | நேரம் :- 3 மணித்தியாலங்கள் |
| சுட்டெண்:.............................. | | |

கவனிக்க:
- ❖ எல்லாவினாக்களுக்கும் விடை எழுதுக.
- ❖ 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1(, (2), (3), (4), என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- ❖ உங்களுக்கு வழங்கப்பட்ட விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை **(X)** இடுக.

### 1-40 வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையினை தெரிவு செய்க

1. நாடகக்கலைபற்றிய பின்வரும் கூற்றுக்களுள் பொருத்தமற்ற கூற்று
   (1) மனிதனை மோதுகை நிலையில் சித்திரிக்கும் கலை
   (2) போலச்செய்யும் கலை வடிவம்
   (3) பாடல்களை அடிப்படையாகக்கொண்ட வடிவம்
   (4) நடிகனை பிரதான மூலகமாக கொண்டிருக்கும் கலைவடிவம்

2. நாடகத்தின் மூலக்கூறுகளுள் பிரதானமான ஒன்றாக அமைவது
   (1) எழுத்துரு (2) நடிப்பு (3) வேடஉடை (4) காட்சிவிதானிப்பு

3. இலக்கியம் சுவைக்கப்படுவது
   (1) கேட்பதில் (2) பார்ப்பதில் (3) கற்பனையில் (4) தொட்டுணர்வதில்

4. வானொலி நாடக நடிகனுக்கு அவசியமற்றது
   (1) ஒப்பனை (2) நடிப்பு (3) குரல் (4) உணர்வு வெளிப்பாடு

5. நடிகனுக்கு வழங்கப்படுகின்ற குரல் பயிற்சிக்கு அடிப்படையான பயிற்சி
   (1) சுவாசப்பயிற்சி (2) கீப்றிச் பயிற்சி (3) கவிதை பாடல் (4) உடல்தளர்வுப்பயிற்சி

6. குரல் வழிச்சித்திரிப்பின்போது கவனிக்கவேண்டியது
   (1) மெய் நிலைகள் அசைவுகள் (2) வீச்சு , புறத்தெரிகை
   (3) உடல்தளர்வு,லாவகம் (4) மெய்யசைவு,லலிதம்

7. நாடகமொன்றின் பிரதான படைப்பாளர்
   (1) நாடக எழுத்தாளர் (2) நடிகர் (3) நெறியாளர் (4) பார்ப்போர்

8. மேடை நாடகமொன்றில் இருந்து தொலைக்காட்சி நாடகம் வேறுபடும் விடயங்களிலொன்று

(1) கட்புல செவிப்புல வடிவம் (2) மனிதப் பிரச்சனைகளைப் பேசும்
(2) பாத்திரந்தாங்கல் இடம்பெறும் (4) பார்ப்போரை உடன் எதிர்கொள்ளும்

9. நாடக எழுத்துருவொன்றினை நாடக ஆற்றுகையாக படைப்பாக்கம் செய்பவர்
(1) நடிகன் (2) நெறியாளன் (3) தயாரிப்பாளன் (4) அரங்க முகாமையாளன்

10. பின்வருவனவற்றில் ஊமம் சார்ந்த பயிற்சியாக கொள்ளக்கூடிய அரங்க விளையாட்டு

(1) ஆடும் வீடும் (2) நண்டு றால் மீன்

(3) காகம் உயிர் பெறுதல் (4) கரடியும் கிராம மக்களும்

11. முன்னாயத்தமின்றிய அரங்கச் செயற்பாடு

(1) ஊமம் (2) அரங்க விளையாட்டு (3) புதிதளித்தல் (4) வகிபாகமேற்றல்

12. பின்வருவனவற்றில் ஆற்றுகைக் கலைவடிவம் எனக்கொள்ள முடியாதது

(1) வில்லுப்பாட்டு (2) சிற்பம் (3) நடனம் (4) இசை

13. நாடகத்தின் தோற்றம் பற்றிய ஏற்றக்கொள்ளப்பட்ட கருத்து

(1) நடனத்தில் இருந்து தோன்றியது

(2) சடங்கில் இருந்து தோன்றியது

(3) பொம்மலாட்டத்தில் இருந்து தோன்றியது

(4) விளையாட்டுக்களில் இருந்து தோன்றியது

14. உலக நாடக தினம் கொண்டாடப்படுவது

(1) ஜனவரி 10 (2) ஏப்ரல் 21 (3) மார்ச் 27 (4) டிசம்பர் 29

15. நாடகமொன்றினை எழுதுபவர்

(1) நெறியாளர் (2) தயாரிப்பாளர் (3) நாடக ஆசிரியர் (4) நடிகர்

16. ‘புதியொதொருவீடு’ நாடகத்தின் முதல் நெறியாளர்

(1) குழந்தை ம. சண்முகலிங்கம் (2) அ. தாசீசியஸ்

(3) மகாகவி (4) பேரா.சி.மௌனகுரு

17. ‘சங்கிலி’ நாடகமானது

(1) சிறுவர் நாடகம் (2) சமூக நாடகம்

(3) வரலாற்று நாடகம் (4) நகைச்சுவை நாடகம்

18. சிறுவர் நாடகத்தின் பண்பாகக் கொள்ள முடியாதது

(1) ஆடல் பாடல் காணப்படும் (2) பஞ்ச தந்திர கதைகள் பயன்படுத்தப்படும்

(3) சமூகப் பிரச்சனைகளைப் பேசும் (4) விளையாட்டு அம்சங்கள் காணப்படும்

19. பின்வருவனவற்றில் பாடசாலை நாடகம் அல்லாதது

(1) ஆரொடுநோகேன் (2) சக்தி பிறக்குது (3) வேள்வித்தீ (4) புழுவாகி மரமாகி

20. ''மொட்டைத்தலையுடன் ஒற்றைப் பிராமணன்'' என்ற பாடல் இடம்பெறும் நாடகம்.

(1) பூதத்தம்பி (2) காத்தவராஜன் (3) காமன் கூத்து (4) சங்கிலியன்

21. பின்வருவனவற்றில் 'உணர்ச்சி வெளிப்பாட்டினை' குறிப்பிடும் அபிநயம்

(1) ஆங்கீகம் (2) ஆஹார்யம் (3) வார்சீகம் (4) சாத்வீகம்

22. 'தோணி' என்ற சிறுகதையை எழுதியவர்

(1) வ.அ.இராசரத்தினம் (2) டோமினிக் ஜீவா

(3) அ.செ.முருகானந்தம் (4) டானியல்

23. நாடகம் என்பதற்கு வழங்கப் பெற்ற பழந்தமிழ்ச்சொல்

(1) நாட்டியம் (2) கூத்து (3) விலாசம் (4) ஆடற்கதை

24. கூத்து மரபுகள் யாவற்றிலும் பயன்படுத்தப்படும் இசைக்கருவி

(1) மத்தளம் (2) உடுக்கு (3) மிருதங்கம் (4) சல்லாரி

25. ஆரொடு நோகேன் நாடகத்தின் பாடுபொருள்

(1) கல்வி பற்றியது (2) சீதனம் பற்றியது

(3) யுத்தம் பற்றியது (4) ஆடம்பர வாழ்வு பற்றியது

26. 'ஊமம்' நாடகத்தில் இடம்பெறாதது

(1) அசைவுகள் (2) உரையாடல்கள் (3) ஆடல்கள் (4) அபிநயங்கள்

27. 'தப்பு' வாத்தியத்தினை பிரதான இசைக்கருவியாகக்கொண்டு ஆடப்படும் கூத்துமரபு

(1) காமன்கூத்து (2) காத்தவராஜன் கூத்து (3) வசந்தன்கூத்து (4) மகிடிக்கூத்து

28. பின்வருவனவற்றில் இசைநாடகத்திற்கு வழங்கப்பட்ட மற்றறொரு பெயர்

(1) விலாச நாடகம் (2) கீர்த்தனை நாடகம்

(3) ஸ்பெசல் நாடகம் (4) நாமாமோடி நாடகம்

29. பின்வரும் கூத்துக்களில் மன்னார் பிரதேசத்துக்குரிய கூத்து மரபு

(1) வடமோடி (2) வாசாப்பு (3) மகிடி (4) வசந்தன்

30. யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவர்களால் அதிகம் பயன்படுத்துப்படும் கூத்து மரபு

(1) காத்தவராஜன் (2) வடமோடி (2) தொன்மோடி (4)வசந்தன்

31.அண்ணமார் வழிபாட்டோடு தொடர்புடைய கூத்து

(1) காமன் கூத்து (2) காத்தவராஜன் (3) நாட்டை (4) பொன்னர் சங்கர்

32. பின்வரும் செயல்களில் 'ஆக்கியல்' அசைவாகக் கொள்ளப்படக்கூடியது

(1) தண்ணீர் அள்ளுதல் (2) அணிநடை நடத்தல்

(3) வீடு கூட்டுதல் (4) வேகமாக ஓடுதல்

33. பின்வருவனவற்றில் அசைவுகளையே அடிப்படையாகக் கொண்ட நாடக வகை

(1) கூத்து (2) இசைநாடகம் (3) ஒப்பேறா (4) பலே

32. மேடை நாடகவெளிப்பாட்டில் நடிகனைப்போல,சினிமாவில்

(1) நடிகன் (2) எழுத்துரு (3) தொலைக்காட்சி (4) கமரா

33. 'கதவடைத்துப்பாடுதல்'என்ற செயற்பாடு தொடர்புபடும் சடங்கு

(1) வேட்டைத்திருவிழா (2) குளிர்த்தி (3) சூரன்போர் (4) பாண்டவர் வனவாசம்

34. பெரும்பாலும் பெண் தெய்வ வழிபாட்டுடன் தொடர்புபடுகின்ற சடங்கு

(1) சூரன்போர் (2) குளிர்த்தி (3) பாஸ்கு (4) வேட்டைத்திருவிழா

35. திருப்பாடுகளின் நாடகங்களை தொடர்ச்சியாகப் பல வருடங்களாக மேடையேற்றி வரும் நிறுவனம்

(1) நாடக அரங்க கல்லூரி (2) திருமறைக் கலாமன்றம்

(3) செயல்திறன் அரங்க இயக்கம் (4) நடிகர் ஒன்றியம்

36. எமது மரபுவழிக்கூத்துக்களை பெரும்பாலும் நகர்த்திச்செல்பவர்கள்

(1) கட்டியகாரர் (2) அண்ணாவிமார் (3) நடிகர்கள் (4) சபையோர்கள்

37. 'ஆரொடு நோகேன்' நாடகத்தின் பெயரானது எடுக்கப்பட்டது

(1) பாரதி பாடலில் இருந்து (2) திருவாசகத்தில் இருந்து

(3) இராமாயணத்தில் இருந்து (4) பகவத் கீதையில் இருந்து


**கீழே தரப்பட்டுள்ள படங்களை அப்படையாகக் கொண்டு 38-40 வரையான கேள்விகளுக்கு விடைதருக**



**A**



**B**



**C**

38. படம் B இல் காணப்படும் நாடக நெறியாளர்

(1) நா. சுந்தரலிங்கம் (2) அ.தாசிசியஸ்

(3) குழந்தை ம. சண்முகலிங்கம் (4) க.சிதம்பரநாதன்

39. படம் C இல் காணப்படும் இசைக்கருவி

(1) பறை (2) மிருதங்கம் (3) மத்தளம் (4) உடுக்கு

40. படம் A இல் காணப்படும் நாடக வகை

(1) கூத்து (2) இசைநாடகம் (3) சிறுவர் நாடகம் (4) சமூகநாடகம்

(40x1=40 புள்ளிகள் )

## பகுதி II

### முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக

1. சுருக்க விடை தருக
   (1) 'பதிற்குறிகள்' என்றால் என்ன?
   (2) நடிகனின் உணர்ச்சியை சிறப்பாக வெளிப்படுத்தும் அங்கம் எது ?
   (3) எண் தொடர்பான அரங்க விளையாட்டு ஒன்று தருக?
   (4) கூத்தின் நெறியாளர் எப்பெயரினால் அழைக்கப்படுவார் ?
   (5) நடிகமணி வி.வி.வைரமுத்து உருவாக்கிய அரங்க நிறுவனம் எது? ?
   (6) சூரன் போர் எத் தெய்வ வழிபாட்டோடு தொடர்புடைய சடங்கு ?
   (7) ஆரொடு நோகென் நாடகத்தில் வரும் 'செல்வராணி'பாத்திரத்தின் தொழில் யாது?
   (8) காமன் கூத்திற்குப் பயன்படுத்தப்படும் பிரதான இசை வாத்தியம் எது?
   (9) அரங்கின் கட்புல மூலகம் **இரண்டு** தருக ?
   (10)குழந்தை சண்முகலிங்கம் எழுதிய நாடகங்கள் **இரண்டு** தருக ? (12 புள்ளிகள்)

2. (1) நடிப்பு என்ற பதத்தினை விளக்குக? (3 புள்ளிகள் )

   (2) நடிகருக்கு அவசியமான பண்புகள் 6 தருக ? (3 புள்ளிகள் )

   (3) மேடை நாடகமொன்றில் நடிக்கும் நடிகனுக்கும் தொலைக்காட்சி நாடகமொன்றில் நடிக்கும் நடிகனுக்குமான நடிப்புச் செயற்பாட்டில் உள்ள வேறுபாட்டினை விபரித்து எழுதுக?
   (6 புள்ளிகள் )

4. (1) 'அரங்க விளையாட்டு 'என்றபதத்தினை விளக்குக? (3 புள்ளிகள் )

   (2) அரங்க விளையாட்டுக்களின் நன்மைகளை பட்டியலிடுக ? (4 புள்ளிகள் )

   (3) கருத்துான்றல் பயிற்சியாக அமையத்தக்க அரங்க விளையாட்டு ஒன்றினை விபரிக்குக?

   (5 புள்ளிகள் )

5. (1) உமது பிரதேசத்தில் பயில் நிலையிலுள்ள மூன்று கூத்து மரபுகளைப்பெயரிடுக?
   (3 புள்ளிகள் )

   (2) அக்கூத்து மரபுகளில் ஒன்றுபற்றி விபரிக்குக? (4 புள்ளிகள் )

   (3) கூத்து, இசை நாடகம் ஆகிய வடிவங்களுக்கிடையிலான ஒற்றுமை வேற்றுமைகளை எழுதுக (5 புள்ளிகள் )

6. (1) ‘ஆரொடு நோகேன்’ நாடகத்தின் பிரதான மோதுகையை எழுதுக?

(4 புள்ளிகள்)

(2) இந்நாடகத்தில் வருகின்ற மூன்று குடும்ப உறப்பினர்களின் பெயர்களையும் எழுதுக.? (3 புள்ளிகள்

(3) மூன்று குடும்பங்களிலிருந்தும் ஒவ்வொரு பாத்திரங்களை தெரிவுசெய்து அவற்றின் பண்புகளை விபரிக்குக?

(5புள்ளிகள்)

7. பின்வருவனவற்றில் யாதேனும் மூன்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக

(1) வேட்டைத்திருவிழா

(2) ரட்டயக்கும

(3) ஒயிலாட்டம்

(4) சொக்கரி

(5) இசை நாடகம்

(3x4= 12 புள்ளிகள் )